# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் 03.08.2026

## முன்னிலை

## முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)

## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 11570/SCIC/2024**

திரு.M. தனசேகரன் த/பெ.V.முருகன் - மேல்முறையீட்டாளர்
எண்.2/45, GROUP HOUSE STREET
இராவத்தநல்லூர் கிராமம்
உத்திரமேரூர் வட்டம்
காஞ்சிபுரம் மாவட்டம் - 603 403.
Phone:96299 00591

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/ - பொது அதிகார அமைப்பு
நீதிமன்ற அலுவலர்
மாநில மனித உரிமைகள் ஆணையம்
எண்.143, பி.எஸ்.குமாரசாமி ராஜா சாலை
(கிரீன்வேஸ் சாலை), சென்னை-600 028.

## ஆணை

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **27.06.2024** |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 30.07.2024 |
| 3. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 28.06.2024 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 27/06/2024 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர்/ மனித உரிமை ஆணையம், கிரீன்வேஸ் ரோடு, சென்னை அவர்களுக்கு அனுப்பி, அதில் "SHRC Case No.2553 நாள் 2019/HC2 வழக்கை ஆய்வு (Investigation) செய்த அலுவலர்களின் பெயர், பதவி, அலுவலகம், ஆய்வு செய்த தேதி, ஆய்வு அறிக்கைகள் தகவலாக வழங்கவும்" என்பன போன்று 7 (ஏழு) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (03/08/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் திரு.M.தனசேகரன் அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். மனுதாரரின் வருகையின்மை ஆணையத்தால் பதிவு செய்யப்படுகிறது. பொது அதிகார அமைப்பின் சார்பில் தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 8(2)-ன்படி அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியாக திருமதி.ஜி.வித்யாலட்சுமி, உதவி பிரிவு அலுவலர், மாநில மனித உரிமைகள் ஆணையம், சென்னை அவர்கள் ஆஜராகி, மனுதாரருக்கு 05/09/2024 மற்றும் 05/11/2025 தேதிகளிட்ட கடிதங்கள் வாயிலாக தகவல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். ஆனால், பொதுத் தகவல் அலுவலரின் பிரதிநிதியால் 05/09/2024 தேதியிட்ட தகவலின் நகலை சமர்ப்பிக்க இயலவில்லை. ஆனால் அத்தகவலை மனுதாரர் பெற்றுக் கொண்டதற்கான சான்றினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். 05/11/2025 தேதியிட்டு மனுதாரருக்கு அனுப்பிய தகவலின் நகலை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில், 28/07/2026 தேதியிட்டு இனம் வாரியான தகவலினை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்து அதன் நகலினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். **ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மனுதாரரின், தகவல் பெறும் உரிமைச் சட்டம்-2005, பிரிவு 6(1)-ன் கீழான 27/06/2024 தேதியிட்ட மனுவிற்கு உரிய காலவரையறையான 30 நாட்களுக்குள் எவ்வித தகவலையும் பொதுத் தகவல் அலுவலர் அளிக்கவில்லை எனத் தெரிய வருகிறது. பொதுத் தகவல் அலுவலரை ஆணையம் எச்சரிக்கிறது. மேலும், மேல்முறையீட்டு அலுவலர், மனுதாரரின் பிரிவு 19(1)-ன் கீழான 30/07/2024 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவிற்கு எவ்வித தகவலையும் அளிக்கவில்லை. இனி வருங்காலங்களில், மனுதாரர்களின், தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழான மனுக்களுக்கு, பொது அதிகார அமைப்பு உரிய காலவரையறைக்குள், தகவல் அளிக்கவில்லையெனில், அச்சட்டத்தின் கீழான நடவடிக்கையினை எதிர்கொள்ள நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது. பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு 28/07/2026 தேதியிட்டு அனுப்பிய தகவல்களை ஆணையம் பரிசீலிக்கையில், அவை ஆவணங்களின்படியான உரிய தகவல் என பதிவு செய்து, ஆணையம் ஏற்கிறது. ஆணையத்தின் அழைப்பாணை அனுப்பப்பட்டு, தனது வாதுரையினை பதிவு செய்ய வாய்ப்பளிக்கப்பட்டும், மனுதாரர் இன்றைய விசாரணையில் ஆஜராகத் தவறியுள்ளார். எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 11570/SCIC/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
நீதிமன்ற அலுவலர்
மாநில மனித உரிமைகள் ஆணையம்
எண்.143, பி.எஸ்.குமாரசாமி ராஜா சாலை
(கிரீன்வேஸ் சாலை), சென்னை-600 028.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

திரு.M. தனசேகரன் த/பெ.V.முருகன்
எண்.2/45, GROUP HOUSE STREET
இராவத்தநல்லூர் கிராமம்
உத்திரமேரூர் வட்டம்
காஞ்சிபுரம் மாவட்டம் - 603 403.
Phone:96299 00591

RG/Sr.PC